**(Under Section 173 BNSS)**
**(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)**

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8109415

1. District மாவட்டம் : Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 10/2024 Date: நாள் 04.09.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.09.2024 at 12.30 hrs & 04.09.2024 at 17.30 hrs Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.09.2024 Time : நேரம் 19.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.09.2024 Time : நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 50 Kms / North East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.V.P.அஜித்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.V.பாண்டி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.03.1996 (d) Nationality : நாட்டினம் -Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மேற்பார்வையாளர் (g) Address : முகவரி எண்.6/16, சேர்ந்தநதி கிராமம், எழுவணி ஊராட்சி, சிறுவனூர் அஞ்சல், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
**திருமதி.ஜெயபுஷ்பம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
**- தாமதம் இல்லை -**

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் இன்று 04.09.2024 இரவு 19.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, சிறுவனூர் அஞ்சல், எழுவணி ஊராட்சி, சேர்ந்தநதி கிராமம், கதவு எண்.6/16 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.V.பாண்டி என்பவரின் மகன் திரு.V.P.அஜித்குமார் என்பவர் என் முன்பாக ஆஜராகி சொன்ன புகாரை இரவு 19.15 மணியிலிருந்து இரவு 20.15 மணிக்குள் அலுவலக கணினி மூலமாக தயார் செய்து, அந்த புகாரை பிரிண்ட் எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து, அதை படித்து பார்க்க சொன்னேன். அவர் அதை படித்து பார்த்துவிட்டு, அவர் சொன்னபடி சரியாக இருந்ததால், அந்த புகாரின் மூன்று பக்கங்களிலும் புகார்தாரர் திரு.V.P.அஜித்குமார் தனது கையொப்பத்தை இட்டும், கைரேகை வைத்தும் அந்த புகாரை என்னிடம் வழங்கினார். மேற்படி புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V.P. Ajith Kumar 4/9/24

4/9/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. SALVAN THURAI
Rank: நிலை Inspector of Police ..........No. எண் ..........
V&AC
Virudhunagar.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.10/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 04.09.2024 இரவு 22.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.ஜெயபுஷ்பம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2024 சட்டப்பிரிவு **7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-** இன்படி வழக்குப்பதிவு செய்தேன். மேற்படி புகார் விபரம் பின்வருமாறு:- திரு.V.P.அஜித் குமார், வயது 26, த/பெ.V.பாண்டி, எண். 6/16, சேர்ந்தநதி கிராமம், எழுவணி ஊராட்சி, சிறுவனூர் அஞ்சல், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம் என்பவர் இன்று 04.09.2024 இரவு 19.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு:- நான் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, சேர்ந்தநதி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு சரியாக எழுத தெரியாது. ஆனால் படிக்க தெரியும். விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகா, இசலி கிராமம், தெற்கு தெரு கதவு எண்.182 என்கிற முகவரியில் வசிக்கும் அரசு பதிவுபெற்ற ஏ-கிரேடு ஒப்பந்ததாரரான திரு.பஞ்சவர்ணம் மகன் திரு.ரமேஷ் என்பவரின் ஒப்பந்த வேலைகளை மேற்பார்வை செய்யும் பணி செய்து வருகிறேன். அதற்கு பணிமுடிந்த பிறகு பணியின் மதிப்பீட்டிற்கு ஏற்றாற்போல் சம்பளம் கொடுப்பார். கடந்த 2021-22ஆம் ஆண்டு ஒன்றிய பொதுநிதியின்கீழ் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலை இலுப்பைக்குளம் ஊராட்சியில் "சாலை இலுப்பைகுளம் ஊராட்சி சாலை இலுப்பைகுளம் கிராமத்தில் சொக்காயி அம்மன் கோவில் செல்லும் சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல்" பணியை செய்வதற்கு நரிக்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் நடவடிக்கைகள் எண்.ந.க.அ2/1184/2022 நாள் 02.08.2023-இன்படி என்னுடைய உரிமையாளர் திரு.ரமேஷ்க்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை என்னுடைய மேற்பார்வையில் கடந்த 19.07.2024ஆம் தேதி தொடங்கி 20.08.2024ஆம் தேதி முடித்தேன். மேற்படி வேலை செய்ததற்கான பட்டியல் தொகையை விடுவிக்க நரிக்குடி வட்டார வளர்ச்சி (வ.ஊ) அலுவலர்தான் உத்தரவிட வேண்டும். எனவே என்னுடைய உரிமையாளரின் உத்தரவுப்படி, மேற்படி வேலை செய்ததற்கான பட்டியல் தொகையை விடுவிக்க வேண்டி நேற்று (03.09.2024) மதியம் சுமார் 12.30 மணிக்கு நரிக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று, நரிக்குடி வட்டார வளர்ச்சி (வ.ஊ) அலுவலர் திருமதி.ஜெயபுஷ்பம் அவர்களை சந்தித்து கேட்டேன். அப்போது அவர் எந்த வேலை, நீங்க யார் என்கிற விபரம் கேட்டுவிட்டு, அவரது மேஜைமீது இருந்த

கோப்புகளை பார்த்துவிட்டு ஆமாம் உங்களுக்கு ரூ.4,98,260/-க்கு பட்டியல் ரெடியா இருக்கு, ஆனா எப்படி உடனே பணத்தை ரிலீஸ் பண்ண முடியும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் ஏன் மேடம், என்ன மேடம் என்று கேட்டேன். அதற்கு அவர் பொதுவா கான்ட்ராக்டர் வேலை செய்யுறவங்க எல்லாம் வேலை முடிஞ்ச பிறகு பணத்தை ரிலீஸ் பண்றதுக்கு மதிப்பீட்டு (LTI of திரு.V.P.அஜித் குமார் (sd) திரு.V.P.அஜித் குமார் 4/9/2024) தொகையில் ஒரு சதவீத கமிசன் தொகையை கொடுப்பது வழக்கம், அதனால நீங்களும் உங்க வேலைக்குரிய மதிப்பீட்டு தொகையில் ஒரு சதவீத கமிசன் தொகையான ரூ.5,000/-த்தை கொண்டுவந்து கொடுங்க, உடனே உங்களுக்கு கிடைக்க வேண்டிய பட்டியல் தொகையை ரிலீஸ் பண்ணிடுறேன் என்று கூறினார். அதற்கு நான் மேடம், 5000 ரூபாயா என்று கேட்டேன். உடனே அவர் நீங்க போங்க, ஒரு சதவீத கமிசன் தொகை தரதுக்கு ரொம்ப யோசிக்கிறீங்க, நீங்க செஞ்ச வேலைய நாளைக்கு (04.09.2024) நேரில வந்து பார்த்துட்டு அதுக்கு பிறகு என்ன பண்ணலாம்னு யோசிக்கிறேன் என்று கூறி அனுப்பிவைத்தார். பின்னர் இன்று (04.09.2024) மாலை 05.00 மணி வரை வராததால், மாலை 05.30 மணியளவில் நரிக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று, நரிக்குடி வட்டார வளர்ச்சி (வ.ஊ) அலுவலர் திருமதி.ஜெயபுஷ்பம் அவர்களை சந்தித்து, மேடம் வேலையை பார்க்க நேரில வருவதாக சொன்னீங்க, வரல மேடம், பணத்தை ரிலீஸ் பண்ணி தாங்க மேடம் என்று கேட்டேன். அதற்கு அவர் நிறைய வேலையாகி போச்சு, அதனால வரமுடியலங்க. ஒரு ரூபாய் கூட தராம பட்டியல் பணத்தை எப்படிங்க ரிலீஸ் பண்ணுவேன். ஒரு ரூபாய் கூட வாங்காம உங்களுக்கு பட்டியல் பணத்தை ரிலீஸ் பண்ணிட்டேன்னா, உங்களுக்கு மாதிரியே மத்தவங்களும் ஒரு ரூபாய் கூட கொடுக்காம பட்டியல் பணத்தை ரிலீஸ் பண்ண சொல்லிருவாங்க என்று கூறி, ஒரு சதவீத கமிசன் தொகை ரூ.5,000/- பணத்தை கொடுத்தால்தான் பட்டியல் பணத்தை ரிலீஸ் பண்ணுவேன் என்று கூறினார். அதற்கு நான் மேடம், ரொம்ப கஷ்டமா இருக்கு, கொஞ்சம் இந்த ஒரு தடவை பார்த்து செய்யுங்க மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னங்க என்று சலிப்பாக கூறிவிட்டு, ரூ.3,000/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டுவந்து கொடுங்க என்றும், இந்த ரூ.3,000/- பணத்தை கொண்டு வந்து கொடுத்தால்தான் இந்த வேலைக்குரிய பட்டியல் பணத்தை ரிலீஸ் பண்ணுவேன் என்றும், உங்க உரிமையாளரின் பெயரில் செய்து முடிக்கும் வேறு வேலைகளுக்குரிய பட்டியல் தொகையையும் பிரச்சினை இல்லாமல் ரிலீஸ் செய்வேன் என்றும் கண்டிப்புடன் கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும் அந்த நேரத்தில் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அன்பிறகு எனது உரிமையாளரிடம் மேற்படி விசயத்தை தெரிவித்தேன். அதற்கு அவரும் நாம செய்த வேலைக்கு நமக்கு

வரவேண்டிய பணத்தை ரிலீஸ் செய்வதற்கு நாம் ஏன் லஞ்சம் தர வேண்டும். நீ போய் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடு என்று தெரிவித்தார். அதனால் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலை இலுப்பைக்குளம் ஊராட்சியில் "சாலை இலுப்பைகுளம் ஊராட்சி சாலை இலுப்பைகுளம் கிராமத்தில் சொக்காயி (LTI of திரு.V.P.அஜித் குமார் (sd) திரு.V.P.அஜித் குமார் 4/9/2024) அம்மன் கோவில் செல்லும் சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல்" பணிக்குரிய பட்டியல் தொகையை திருமதி.ஜெயபுஷ்பம் அவர்கள் என்னுடைய உரிமையாளர் பெயரில் ரிலீஸ் செய்வதற்கு என்னிடம் கேட்ட ரூ.3,000/- லஞ்சப்பணத்தை தற்போது கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட நரிக்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி (வ.ஊ) அலுவலர் திருமதி.ஜெயபுஷ்பம் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த வாய்மொழி புகார் வாக்குமூலத்தினை தங்களிடம் சொல்ல சொல்ல, அதனை தாங்கள் கனிணியில் தட்டச்சு செய்து, அதை பிரிண்ட் எடுத்து என்னிடம் கொடுக்க, நான் அதை படித்தும் பார்த்தேன். அதில் நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு (LTI of திரு.V.P.அஜித் குமார் (sd) திரு.V.P.அஜித் குமார் 4/9/2024) Sir, The above complainant Tr.V.P.Ajith Kumar was appeared before me on 04.09.2024 at 19.00 hrs and recorded his oral complaint between 19.15 hrs and 20.15 hrs through computer by me. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.10/2024 u/s. 7 of the P.C. Act-1988 as amended in 2018 on 04.09.2024 at 22.00 hrs and took up for investigation.(Sd) (C.Salvan Thurai) 4/9/24 Inspector of Police, V&AC, Virudhunagar.

The original FIR along with original complaint are submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

4/9/24
(C. SALVAN THURAI)
Inspector of Police
V&AC
Virudhunagar